சரியென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்து இருக்கிறார்கள். முன்னாள் முதலமைச்சர்கூட, இந்தத் தேசிய நதிநீர்த் திட்டம் மூலமாகத் தீர்வுகாண வேண்டுமென்று, தமிழகத்தினுடைய மக்களுக்குப் பாதகமான கருத்துக்களைச் சொல்லி, வரைவுத் திட்டத்தை ஏற்றுக்கொண்டு வந்திருக்கிற செய்திகளை நம்மால் காண முடிகிறது. ஆக, மத்திய அரசு காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்கிறதா; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிரதமரிடத்திலே வலியுறுத்தினார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திரு. பழனிசாமி அவர்கள் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வந்துள்ள இந்தப் பிரச்சினை மிக முக்கியமான பிரச்சினை என்பதில் இருவேறு கருத்துக்களுக்கு இடமில்லை. ஆனால், இதுபற்றி இந்த மன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கை தொடர்பாகப் பொது விவாதம் நடைபெற்று, அப்போது நான் உரை நிகழ்த்தியபோதும், ஆளுநர் உரை தொடர்பாக நான் உரை நிகழ்த்தியபோதும், இந்தப் பிரச்சினை பற்றி விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கின்றேன்.

இந்தத் தேசிய நதிநீர்க் கொள்கை என்பது புறக்கணிக்கப்படக்கூடிய ஒன்று அல்ல. ஆனால் அந்தக் கொள்கையையும், காவிரிப் பிரச்சினையையும் இப்போது முடிச்சுப்போட்டு, அந்தக் கொள்கையை வலியுறுத்துகின்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினையைத் தள்ளிப்போடுவோம் என்ற கருத்தை நாம் ஏற்பதற்கில்லை; இதை மிகத் தெளிவாகப் பலமுறை, நாம் விளக்கியிருக்கின்றோம். உச்சநீதிமன்றம் இதுபற்றி விசாரணை நடத்திக்கொண்டு இருக்கிறது. இடையிலே உச்சநீதிமன்றம் தந்த ஒரு கருத்தின் அடிப்படையிலேதான் மீண்டும் ஒருமுறை கர்நாடக முதலமைச்சரோடு நான் பேசுவதற்கு ஒத்துக்கொண்டு 4, 5 தடவை பேசிப் பார்த்து, அதிலே ஒரு முடிவு கிடைக்காத காரணத்தால், அதைப் பற்றி உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் சொல்லி, பிரச்சினையை நீதிமன்றத்திற்கே விட்டு விட்டோம். பிறகு உச்சநீதிமன்றம் மத்திய அரசிலேயிருந்து ஒரு கருத்தைப் பெற்றது. மத்திய அரசு வகுத்துக் கொடுத்த அந்த கருத்து மாநில அரசுகளுடைய கருத்துக்கு உடன்பட்டதா

அல்லவா என்பதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்று எல்லா மாநிலங்களையும், குறிப்பாக, தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு விடுக்கப்பட்ட அந்த அறிவிப்பின்மீது தமிழ்நாடு தன்னுடைய கருத்தை அனுப்பி இருக்கிறது. அதைப் போலவே கேரளம் தன்னுடைய கருத்தை அனுப்பியுள்ளது. பாண்டிச்சேரி தன்னுடைய கருத்தை அனுப்பி வைத்து இருக்கின்றது. கர்நாடகம் மாத்திரம், மத்திய அரசு—ஏற்கெனவே ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அரசு—எடுத்த நிலைக்கு மாறாக வேறொரு நிலையை எடுத்திருக்கிறது. Authority என்ற ஒன்றை அமைக்க வேண்டும் என்பது மத்திய அரசினுடைய திட்டத்திலே ஒரு பெரும் கூறாகும். அந்த Authority யினுடைய பணி என்னவென்றால் நடுவர் மன்றத் தீர்ப்பை, இடைக்காலத்திற்கு, தமிழகத்திற்கு தரப்படவேண்டிய அளவு தண்ணீர் எவ்வளவு என்பதை அறிந்து, அந்தத் தண்ணீரைத் தமிழகத்திற்குத் தருவதைச் செயல்படுத்த வேண்டும் என்பதுதான் அந்த Authority யினுடைய பணியாக இருக்க வேண்டும் என்பது மத்திய அரசு தந்துள்ள திட்டமாகும். அந்தத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளாத கர்நாடக அரசு Authority என்று இருக்கக்கூடாது, Committee என்று இருந்தால் போதுமானது என்று கூறுகிறது. அதிலே நமக்கும் அவர்களுக்கும் ஒத்துவராத கருத்துக்கள் இருக்கின்றன. இதைத்தான் வலியுறுத்திக் கொண்டே இருக்கின்றோம்.

முற்பகல் 11-05

இப்போது நான் பிரதமரை டெல்லியிலே சந்தித்தபோதுகூட அவரிடத்திலே கொடுக்கப்பட்ட, தமிழகத்தினுடைய நலனுக்காகக் கொடுக்கப்பட்ட பல்வேறு கோரிக்கைகளிலே முக்கிய கோரிக்கையாகக் காவிரிப் பங்கீடு பற்றிய கோரிக்கையையும் தந்து, அவரிடத்திலே விவாதித்து இருக்கின்றேன். இதிலே ஐக்கிய முன்னணி அரசு—மத்திய அரசு—எடுத்த அதே நிலையைத்தான் நீங்களும் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இல்லாவிட்டால், அது தமிழகத்திற்கு, தமிழக விவசாயிகளுக்குப் பேராபத்தாக முடியும் என்பதை அவரிடத்திலே வலியுறுத்தி எழுதியும் கொடுத்திருக்கிறேன்; நேரிலும் அவரிடத்திலே பேசிவிட்டு வந்திருக்கின்றேன்.

அடுத்து, கர்நாடக முதல்வர் தந்துள்ள அறிக்கையைப் பற்றி எல்லாம் இப்போது நான் விமர்சிக்க விரும்பவில்லை. ஏன் என்றால் அந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதாக இல்லை. இனியும் பேச்சு வார்த்தை என்பதற்கு இடம் இல்லை. ஆனால், இன்றைய பிரதமர் அவர்கள், மீண்டும் பேச்சுவார்த்தை என்று வலியுறுத்துவார்களேயானால் அவரிடத்திலே, எத்தனை முறை பேச்சுவார்த்தை நடைபெற்று இருக்கிறது,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எவ்வளவு தோல்விகள் அதிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதையும், உச்ச நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு சென்றபிறகு, உச்ச நீதிமன்றத்தினுடைய முடிவைத்தான், ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதைத்தான், தமிழக அரசின், சார்பாக தமிழ் மக்களின் சார்பாக, எல்லாக் கட்சிகளின் சார்பாக நான் எடுத்து வைக்க இருக்கின்றேன் என்பதை எடுத்துக்கூறி, இதற்கு இடையிலே நாம் இதுபோன்ற விவாதங்களை அடிக்கடி இங்கே எடுத்துக் காட்டியிருப்பதைப்போல, சூடானதாக, உணர்ச்சிவயப்பட்டதாக ஆக்குவதன் மூலம், இரு மாநில மக்களிடையே வேறுபாடான கருத்துக்களையோ இரு மாநில மக்களுடைய நல்லெண்ணங்களுக்கு ஊறுதேடுகிற நிலைகளையோ உருவாக்கக்கூடாது என்பதற்காகத்தான், சட்டப்படி காரியங்கள் நடைபெற வேண்டும் என்ற அந்த நோக்கத்திலே இந்த அரசு ஈடுபட்டு வருகின்றது. அதிலே இம்மியும் பிறழாமல் இந்த அரசு நடைபோடும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, காவிரிப் பிரச்சினைக்கு நல்ல முடிவைக் காண்பதற்கு இன்றுள்ள மத்திய அரசு முன்வரவேண்டும் என்ற கோரிக்கையை இங்கே எழுப்பப்பட்ட இந்தப் பிரச்சினையின் அடிப்படையிலே நான் மத்திய அரசுக்கு வைத்து, இந்த அளவில் அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் என்னிடம் ஒரு அறிவிப்பாகக் கூடத் தரவில்லை. ஆனால் ஒரு செய்தித்தாளின் நகலைக் காட்டினார்கள். இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவம் கருதியும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளிக்கத் தயாராக இருந்த காரணத்தாலும், இதை இங்கே எழுப்புவதற்கு அவர்களுக்கு அனுமதி அளித்தேன். அதை முன்னுதாரணமாக, எதிர்காலத்திலே மற்ற உறுப்பினர்கள் பின்பற்றக்கூடாது என்றுக் கேட்டுக் கொள்கிறேன்.

8. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மானியக் கோரிக்கை எண் 17—கல்வி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : *1998-99* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் *17*-கல்வி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.